


## பாமாலை 462 நான் உம்மைப் பற்றி

**1** நான் உம்மைப் பற்றி இரட்சகா

வீண் வெட்கம் அடையேன்

பேரன்பைக் குறித்தாண்டவா

நான் சாட்சி கூறுவேன்

பல்லவி

சிலுவை அண்டையில்

நம்பி வந்து நிற்கையில்

பாவ பாரம் நீங்கி  வாழ்வடைந்தேன்

எந்த நேரமும் எனதுள்ளத்திலும்

பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்

**2** ஆ உம் தன் நல்ல நாமத்தை

நான் நம்பி சார்வதால்

நீர் கைவிடீர் இவ்வேழையைக்

காப்பீர் தேவாவியால்

**3** மா வல்ல வாக்கின் உண்மையைக்

கண்டுணரச் செய்தீர்

நான் ஒப்புவித்த பொருளை

விடாமல் காக்கிறீர்

**4** நீர் மாட்சியோடு வருவீர்

அப்போது களிப்பேன்

ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர்

மெய் பாக்யம் அடைவேன்